ආයතනයේ නම : ශ්‍රී ලංකා රේගුව

පාර්ලිමේන්තු ප්‍රකාශනමාලා අංක : 243

පාර්ලිමේන්තුවේ රජයේ ගිණුම් පිළිබඳ කාරක සභාව විසින් සභාගත කරන ලද වාර්තා සම්බන්ධයෙන් ස්ථාවර නියෝග අංක 119(4) යටතේ ගරු අමාත්‍යවරයාගේ නිරීක්ෂණ හා ගනු ලබන පියවර පාර්ලිමේන්තුව වෙත ඉදිරිපත් කිරීම.

நிறுவனத்தின் பெயர் : **இலங்கை சுங்கம்**

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இலக்கம் : 243

பாராளுமன்றத்தின் அரச கணக்குக் குழுவினால் முன்வைக்கப்பட்ட அறிக்கை தொடர்பாக நிலையியற் கட்டளை இலக்கம் 119 (4) இன் கீழ் கௌரவ அமைச்சரின் அவதானிப்புக்களும் மற்றும் அது தொடர்பாக எடுக்கப்படும் நடவடிக்கைகளும் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல்

**Name of the Institution : Sri Lanka Customs**

**Parliamentary Series : 243**

**Submission of observations of Hon. Minister and steps taken with regard to the reports tabled by the Committee on Public Accounts in terms of Standing Order No. 119(4)**

මුදල්, ක්‍රමසම්පාදන සහ ආර්ථික සංවර්ධන අමාත්‍යාංශය
நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு
MINISTRY OF FINANCE, PLANNING AND ECONOMIC DEVELOPMENT

මහලේකම් කාර්යාලය, කොළඹ 01, ශ්‍රී ලංකාව. | செயலகம், கொழும்பு 01. இலங்கை. | The Secretariat, Colombo 01. Sri Lanka.

කාර්යාලය / அலுவலகம் / Office: 011 - 2484500, 011 - 2484600, 011 - 2484700
ෆැක්ස් / தொலைநகல் / Fax: 011 - 2449823
වෙබ් අඩවිය / இணையத்தளம் / Website: www.treasury.gov.lk

මගේ අංකය / எனது இல. / My No.: MF06/10/PS/243
ඔබේ අංකය / உமது இல. / Your No.:
දිනය / திகதி / Date: 2025.11.06

கௌரவ பாராளுமன்ற சபைத்தலைவர் ஊடாக,
மாண்புமிகு சபாநாயகர்
இலங்கை பாராளுமன்றம்
ஸ்ரீ ஜெயவர்தனபுர கோட்டே

**பொதுக் கணக்குகள் குழுவால் பாராளுமன்றக் கூட்டத் தொடர் இலக்கம். 243 இல் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில் சிறப்பித்துக் கூறப்பட்ட பொதுவான அவதானிப்புகள் / உத்தரவுகளில், நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கீழ் இயங்கும் இலங்கை சுங்கம் தொடர்பான அவதானிப்புகள் / உத்தரவுகள் தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகளதொடர்பான அறிக்கை.**

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தின் திருத்தப்பட்ட நிலையியற் கட்டளை இலக்கம். 119(4) இன் பிரகாரம், பொதுக் கணக்குகள் குழுவால் அமைச்சுகள் மற்றும் திணைக்களங்களின் செயல்பாடுகளை ஆய்வு செய்த பின்னர், பொதுக் கணக்குகள் குழுவால் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள அவதானிப்புகள் / பரிந்துரைகள் / உத்தரவுகள் தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பான அறிக்கையை உரிய அமைச்சர் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டும்.

அதன்படி, பத்தாவது பாராளுமன்றத்தின் முதல் அமர்வின் போது, பொதுக் கணக்குகள் குழு, மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தின் 2020, 2021, 2022 மற்றும் 2023 ஆம் நிதியாண்டுகளுக்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைகளை ஆராய்ந்து, 2025.03.10 மற்றும் 2025.03.21 அன்று அதன் தற்போதைய செயல்திறனை மீளாய்வு செய்த பின்னர், அதன் அவதானிப்புகள்/ உத்தரவுகள் /பரிந்துரைகளை பாராளுமன்ற தொடர் இலக்கம் 243 இல் சேர்த்துள்ளது. அதன்படி, நான், நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கீழ் இயங்கும் இலங்கை சுங்கம் தொடர்பான அவதானிப்புகள்/ உத்தரவுகள் /பரிந்துரைகளை செயல்படுத்துவது தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்/தற்போதைய நிலை அடங்கிய அறிக்கையை இதன் மூலம் சமர்ப்பிக்கிறேன்.

இலங்கை சுங்கத் திணைக்களம், தேவைப்படும்போது இறக்குமதி செய்யப்படும் மோட்டார் வாகனங்கள் தொடர்பாக தினசரி அனுப்பப்படும் தரவுகளின் துல்லியத்தை சரிபார்க்க உதவும் வகையில், ASYCUDA World அமைப்பின் பார்வைக்கு மட்டுமேயான கணக்குகளை மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்திற்கு வழங்கியுள்ளது. மேலும், மோட்டார் வாகனங்களை விடுவிப்பதற்கு பயன்படுத்தப்படும் சுங்கப் பதிவேட்டின் "வாகனத் தாள்" இல் பதிவுசெய்யப்பட்ட தகவல்களும் மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்திற்கு மின்னணு முறையில் அனுப்பப்படுகின்றன. மேலும், சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகளைக் குறைப்பதற்கு ஏற்கனவே வினைத்திறனான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்பது பாராளுமன்றத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்படுகிறது.

நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கீழ் இயங்கும் இலங்கை சுங்கத்தின் நிதி நிர்வாகத்தை வலுப்படுத்தும் வகையில், திணைக்களத்தின் உள்ளக கணக்காய்வுப் பிரிவும் அதன் கணக்காய்வுப் பணிகளைத் திறமையாக மேற்கொண்டு வருகிறது. மேலும் அமைச்சு காலாண்டு கணக்காய்வு முகாமைத்துவக் குழு கூட்டங்களை நடத்துகிறது, இதன் மூலம் தேவையான வழிகாட்டுதல் மற்றும் நெறிப்படுத்தல்கள் வழங்கப்படுகின்றன.

ஒப்பம்

அநுர குமார திசாநாயக்க

நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர்

திணைக்களத்தின் பெயர் : இலங்கை சுங்கம்

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இல. : 243

*நிலையியல் கட்டளை இலக்கம் 119(4) இன் கீழ் அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவினால் சமர்ப்பிக்கப்படுகின்ற அறிக்கை சம்பந்தமாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் அவதானிப்புகள் பற்றிய தகவல்களை சமர்ப்பித்தல்.*

| | அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள செயற்குழுவினால் அடையாளம் காணப்பட்ட குறைபாடுகள் | நிறுவனத்தினால் குறைபாடுகளை திருத்திக் கொள்வதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் / தற்போதைய நிலை |
|---|---|---|
| 5 | சுங்கத் திணைக்களத்தினால் மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்திற்கு வாகனங்களை பதிவு செய்வதற்காக அனுப்பப்பட்டுள்ள சகல தகவல்களையும் மாற்ற முடியாத விதத்தில் தயாரித்து கணனி வலையமைப்பு தொகுதியொன்று தாபிக்கப்பட்டிருக்கவில்லை. | சுங்கத் தடைநீக்க நடவடிக்கைகள் முடிவடைந்ததன் பின்னர் மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்திற்கு சுங்கப் பதிவுத் தகவல்கள் அனுப்பப்படுகின்றது. சிலவேளைகளில் அவ்வாறு அனுப்பப்பட்ட சுங்க பதிவுகளில் உள்ள தரவுகளை திருத்த வேண்டி ஏற்படுமாயின், உரிய சுங்க நடவடிக்கை முறைக்கு இணங்கியதாக திருத்தங்கள் மேற்கொள்ளப்படுகின்றது.<br><br>மேலும், இலங்கை சுங்க திணைக்களத்தினால் நாளாந்தம் அனுப்பப்படுகின்ற இறக்குமதி செய்யப்படும் மோட்டார் வாகனங்களின் தகவல்களின் உண்மைத் தன்மையை தேவையான சந்தர்ப்பங்களில் பரிசீலனை செய்வதற்கு இலங்கை சுங்க திணைக்களத்தின் இறக்குமதி ஏற்றுமதி பணிகளை முறைமையாக மேற்கொள்வதற்கு பயன்படுத்தப்படுகின்ற ASYCUDA World தொகுதியில் view only கணக்கு மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.<br><br>இவ்வாறு மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்திற்கு சுங்க குறிப்பு தரவுகள் அனுப்பப்பட்டதன் பின்னர் அந்த தகவல்கள் அங்கு மாற்றங்களுக்கு உட்படுத்தப்படுகின்றதா/ இல்லையா என்பது பற்றி இலங்கை சுங்கத் திணை களத்திற்கு கூற முடியாது.<br><br>மேலும் இடைத்தொடர்பு தொகுதி தரவு பரிமாற்றத்திற்காக (System to System Integration) இலங்கை சுங்கத் திணைக்களம் ASYCUDA World தொகுதியை இற்றைப்படுத்தியுள்ளது. |

| | | |
|---|---|---|
| 6 | இறக்குமதி செய்யப்படும் மோட்டார் வாகனங்களின் உற்பத்தி வருடம், உற்பத்தி செய்த நாடு மற்றும் சிலிண்டர் கொள்ளளவு உள்ளிட்ட முக்கியமான தகவல்கள் சுங்க கணனி வலையமைப்புடன் தொடர்பு படுத்தப்பட்டு இல்லாதபடியினால் மேற்குறிப்பிட்ட விடயங்களை மாற்றி மோட்டார் வாகனங்களை பதிவு செய்துள்ள சந்தர்ப்பங்கள் காணப்பட்டன. | மோட்டார் வாகனங்களின் தடைநீக்கத்திற்கு பயன்படுத்தப்படுகின்ற சுங்கப் பதிவில் Vehicle Sheet இல் குறிப்பிடப்படுகின்ற வாகனத்தின் உற்பத்தி வருடம் (year of Manufacture) சிலிண்டர் கொள்ளளவு (Vehicle Engine Capacity) உற்பத்தி செய்த நாடு (Country of Origin) இயந்திரத்தின் இலக்கம் (Engine Number) சேஸிஸ் இலக்கம் (Chassis Number) வாகனத்தின் மாதிரி (Vehicle make/Model) மாத்திரமன்றி சுங்கப் பதிவில் குறிப்பிடப்பட்டுள்ள இறக்குமதியாளர்களின் விபரம் (Importer Code/ name/Address) சுங்க வரித் தொகை (Customs Importer Tax Amount) போன்ற தகவல்களும் 2020 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 01 ஆம் திகதியிலிருந்து இல்லத்திரனியல் ரீதியாக மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்திற்கு அனுப்பப்படுகின்றது.<br><br>மோட்டார் வாகனம் ஒன்றை முதலில் பதிவு செய்வதற்கு முன்னர் அந்த மோட்டார் வாகனத்தை உரிய முறையில் சுங்கத் தீர்வைகளை செலுத்தி இறக்குமதி செய்யப்பட்டுள்ள வாகனம் என்பதை உறுதிப்படுத்திக் கொள்வது இந்த தரவு அனுப்பீட்டின் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது.<br><br>அவ்வாறு அனுப்பப்பட்ட தகவல்களை மாற்றி வாகனம் பதிவு செய்யப்பட்டு இருக்குமானால், அது சம்பந்தமான விடயங்களை மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்திடம் விசாரித்து அறிதல் வேண்டும். |
| 9 | மேற்கூறிய கணினி அமைப்பை இலங்கை சுங்கம், இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டுத் திணைக்களம் மற்றும் உள்நாட்டு இறைவரித் திணைக்களம் போன்ற நிறுவனங்களுடன் இணைப்பதன் மூலம் முறைகேடுகளைத் தடுக்கவும், திறமையான சேவைகளை வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | முறைகேடுகளை தடுப்பதற்கு மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களம், உள்நாட்டு நிறைவரித் திணைக்களம், மற்றும் இறக்குமதி ஏற்றுமதி கட்டுப்பாட்டுத் திணைக்களம் போன்ற நிறுவனங்களை இலத்திரனியல் ரீதியில் இணைப்பதற்கான தேவைப்பாட்டை இலங்கை சுங்கத் திணைக்களம் வாதங்கள் எதுவுமின்றி ஏற்றுக் கொள்கின்றது. இந்த சந்தர்ப்பம் வரையிலும் இலங்கை சுங்கத் திணைக்களத்தினால் மோட்டார் வாகன இறக்குமதியுடன் தொடர்புபட்ட தரவுகள் இலத்திரனியல் ரீதியில் மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களத்திற்கு அனுப்பப்படுகின்றன. இவ்வாறு அனுப்பப்படும் தரவுகளுக்கு ஏற்புடையதாக மோட்டார் வாகனமொன்று மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளதா என்பதும், பதிவு செய்யப்பட்ட திகதி போன்ற தகவல்களும் மோட்டார் போக்குவரத்து |

| | | |
|---|---|---|
| | | திணைக்களத்திடம் இருக்க வேண்டிய அதேவேளையில், அந்த மோட்டார் வாகன பதிவு பற்றிய தகவல்களை உள்நாட்டு இறைவரித் திணைக்களம், மற்றும் இறக்குமதி ஏற்றுமதி கட்டுப்பாட்டுத் திணைக்களம் போன்ற நிறுவனங்களுடன் பரிமாற்றிக் கொள்வதினூடாக மிகவும் வெளிப்படையான மற்றும் வினைத்திறன் மிக்க சேவையொன்றை வழங்கக்கூடியதாக இருக்கும். |

***பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இல. 243 இற்காக இலங்கை சுங்கம் தொடர்பாக நிலையியல் கட்டளை இலக்கம் 119(4) இன் கீழ் அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவினால் சமர்ப்பிக்கப்படுகின்ற அறிக்கை சம்பந்தமாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் அவதானிப்புகள் பற்றிய தகவல்களை மேற்குறிப்பிட்டவாறு தயவுடன் சமர்ப்பிக்கின்றேன்.***

***ஒப்பம்***
***சுங்கப் பணிப்பாளர் நாயகம்***
***இலங்கை சுங்கம்***